**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**O.S. No. 625/2023**

**<u>வா.சா.1 / புஷ்பவள்ளி /19.01.2026</u>**

**<u>இடைக்கால மனு எண்.07/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் கூடுதலாக குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் :</u>**

வா.சா.ஆ.1 பொது அதிகார பத்திரம் வழங்குவதற்கு முன்பு தாவா சொத்தில் எனக்கு உரிமையோ பாத்தியமோ இருந்ததா என்று கேட்டால் கூட்டுக்குடும்ப சொத்தாக எல்லோரும் அனுபவித்து வந்தோம். அவ்வாறு கூட்டுக்குடும்ப சொத்தாக அனுபவித்து வந்ததாக பிராதிலும் எனது முதல் நிலை விசாரணையிலும் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 பொது அதிகாரம் எழுதி கொடுத்த முனியப்பன் மற்றும் ஈஸ்வரி தற்போதும் நல்ல உடல்தகுதியுடன் ஈரோடு மாவட்டம் வெள்ளோட்டில் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். முனியப்பன் மற்றும் ஈஸ்வரி ஆகியோர் தாவா சொத்துக்கான கிரயத் தொகையை பெற்று கொண்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் பணம் பெற்றுக்கொள்ளவில்லை என்பது தெரியும்.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை.**

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2026.01.19 20:02:33 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.